**O.S.No. 232/2013**

**DW 4:** சரஸ்வதி தேதி 18.02.2026

பிவாசா 4 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் தந்தை 7.12.2004 ல் 1.20 ஏக்கரை தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்து விட்டார் என்றால் சரிதான். அதே சொத்தை 7.1.2008 அன்று நான் இந்த வழக்கின் 8ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டென் என்றால் சரியல்ல அந்த கிரைய பத்திரம் ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டார்கள் என்று சொல்கிறேன். என் தந்தை சீரங்ககவுண்டர் மீதி சொத்தான 3.85 3/4 ஏக்கரை 7.1.2008 ல் 9 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல அந்த கிரைய பத்திரம் ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டார்கள் என்று சொல்கிறேன். 24.1.2008 ல் 8 மற்றும் 9 பிரதிவாதிகள் வாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. வாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல நான் தான் அனுபவித்து வருகிறேன். தாவா சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் அனுபவத்தில் இருப்பதற்கான வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை என்பதால் ஆவணங்களை குறித்து சொல்ல தெரியாது. தாவா சொத்தில் நான் பங்கு கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. என்னுடைய எதிர் வழக்குரை சங்கதிகள் பொய்யானவை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.